

மாநகராட்சி பள்ளி மாணவ-மாணவிகள் மெட்ரோ ரெயிலில் பயணம் செய்தனர். (பழைய படம்).

# மாணவ-மாணவிகள் மெட்ரோ ரெயிலில் பயணம்

சென்னை, ஆக. 7-

சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனம் மெட்ரோ ரெயிலைப் பற்றியும் அதில் உள்ள வசதிகள் மற்றும் தொழில் நுட்பங்கள் குறித்தும் அரசு மற்றும் மாநகராட்சி பள்ளிகளின் மாணவ-மாணவியர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தியது.

மாணவ-மாணவிகள் சென்ட்ரல் மெட்ரோவில் இருந்து கோயம்பேடு வழியாக விமான நிலையம் மற்றும் பரங்கிமலை, வண்ணாரப்பேட்டையில் இருந்து ஏ.ஜி.டி.எம்.எஸ். வழியாக விமான நிலையம் வரை மெட்ரோ ரெயிலில் கல்விப் பயணம் ஏற்பாடு செய்து மாணவ-மாணவிகளை அழைத்து செல்கின்றனர்.

மெட்ரோ ரெயிலின் சிறப்பு அம்சங்கள் பற்றி மாணவர்களுக்கு விளக்கப்பட்டு வருகிறது.

கடந்த 2018-19-ம் கல்வி ஆண்டில் மொத்தம் 31,178 மாணவ-மாணவியர்கள் மெட்ரோ ரெயிலில் பயணித்து பயன்பெற்றனர்.

இந்த ஆண்டில் ஜூலை மாதத்தில் 4,424 மாணவர்கள் கல்விப் பயணத்தை மேற்கொண்டனர்.

ஜூன் முதல் ஜூலை வரை மொத்தம் 8708 மாணவ-மாணவியர்கள் பயணித்து மகிழ்ந்துள்ளார்கள்.